சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–29.10.2020

**<u>சாதாரணக்கூட்டம்</u>**

திருவள்ளுவர் ஆண்டு, சார்வரி வருடம் ஐப்பசி மாதம் 13–ஆம் நாள் (அக்டோபர் திங்கள் 29–ஆம் நாள்:–29.10.2020) வியாழன் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 27 வார்டு வரை உள்ள பகுதிகளில் தற்போது கீழ்க்கண்ட விபரப்படி 1486 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | விளக்குகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 1X24 வாட்ஸ் CFL விளக்கு | 1369 |
| 2 | 4X24 வாட்ஸ் CFL விளக்கு | 105 |
| 3 | உயர் மின் கோபுர விளக்கு (M.H.400 வாட்ஸ் – 5 விளக்குகள்) | 12 |
| | மொத்தம் | 1486 |

மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு பணியினை இந்நகராட்சி மூலம் மேற்கொள்ளும் பட்சத்தில் அரசு நிர்ணயித்த அளவுகோலின்படி பணி மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் தனியார் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13899/2016/DO1 நாள்.16.08.2017ல் அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரி இந்நகர்மன்றத் தீர்மான எண்.264 நாள்.07.12.2017ல் அனுமதிக்கப்பட்டதன்படி M/s சடையாண்டி ஏஜென்சீஸ், ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம் அவர்களின் தனியார் நிறுவனம் மூலம் 07.12.2017 முதல் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவு வழஙகப்பட்டது. மேலும் மேற்படி தனியார் மூலம் மேலும் இரண்டாண்டுகளுக்கு தெருவிளக்கு பராமரிப்பு பணியினை மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.534, நாள்.30.11.2018 மற்றும் 786, நாள்.31.12.2019 வரை அனுமதி பெற்று நீட்டிப்பு செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிக்காலம் 07.12.2020 உடன் முடிவடையவுள்ளது.

எனவே மேற்படி தனியார் மூலம் தெருவிளக்குகள் பராமரிக்கப்படும் பணிக்காலம் முடிவடைய உள்ளதால், தொடர்ந்து மேலும் மூன்று ஆண்டுகளுக்கு தனியார் மூலமே பராமரிப்பு பணிகளை பொதுப்பணித்துறை அரசு தரப்படுத்தப்பட்ட விலை நிர்ணயப் பட்டியல் 2020–21ன்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.17.00 இலட்சத்திற்கு கொள்கை ரீதியான ஒப்புதல் (In Principle Clearance) பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணியினை ஒப்படைக்கும் நாள் முதல் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு தனியார் மூலம் மேற்கொள்ள மதிப்பீடு மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவம் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பித்து கொள்கை ரீதியான ஒப்புதல் (In Principle Clearance) பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3154/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **117, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான S.R.O.தெருவில் கட்டப்பட்டுள்ள கடை எண்.6, திரு.எம்.சங்கரநாராயணன் பெயரில் உள்ளது. 25.08.2020–ஆம் தேதிய விண்ணப்பத்தில் திரு.எம்.சங்கரநாராயணன் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தொடர்ந்து கடையினை நடத்த முடியாத நிலையில் அவரது பங்குதாரர் திருமதி.எஸ்.சாந்தி பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக் கோரியுள்ளார். மேற்படி மனுதாரர் அரசு ஆணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007இன்படி பெயர் மாற்ற கட்டணம் ரூ.2,500/– மற்றும் வைப்புத் தொகை ரூ.28,536/– நகராட்சிக்கு 23.09.2020–இல் செலுத்தியுள்ளார். மேற்படி கடையினை திருமதி.எஸ்.சாந்தி பெயரில் பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2502/2020/அ2)**

**தீர்மான எண், நாள்** **118, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகன எண்.TN60S6634–க்கு சில மராமத்துப் பணிக்கு நகர்மன்றத் தீர்மான எண்.122, நாள்.14.09.2020 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை செய்வதற்கு 21.09.2020–ஆம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | அகரம் மோட்டார்ஸ், கம்பம் | ரூ.47400/– |
| 2. | AMN மோட்டார்ஸ், கம்பம் | ரூ.50700/– |

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் அகரம் மோட்டார்ஸ், கம்பம் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின், விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மேலும் நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அதிகாரி (ம) ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7057/2014/இ2)**

**தீர்மான எண், நாள்** **119, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் எண்.TN60S6634க்கு ஒரு வருட காலத்திற்கு (16.10.2020 முதல் 15.10.2021 வரை) காப்பீடு புதுப்பிப்பு செய்வதற்கு, உத்தேச தொகை ரூ.16407/–யை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம்.**
3. **அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையாளர் அவர்களின் முன்**

அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7057/2014/இ2).

**தீர்மான எண், நாள்** **120, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலமாக துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.21085/பி3/2016, நாள்.31.08.2016–இன்படி 01.08.2016 முதல் 31.07.2019 முடிய அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி காலத்திற்கு பின்பு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வது சம்மந்தமாக கடந்த 03.06.2019ம் அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அதனடிப்படையில் மேற்கண்ட அலுவலகத்தில் இருந்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள அனுமதி கோரி ந.க.2790/2019/அ3, நாள்.03.07.2019ஆம் தேதிய கடிதப்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்திரவு கிடைக்கும் வரை, சின்னமனூர் நகராட்சி பொது மக்களின் சுகாதார நலன் கருதி இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.0576/2015/எச்1–இன்படி, 01.08.2019 முதல் 30.09.2020 வரை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி உத்திரவை எதிர்நோக்கி ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது.

இந்நகராட்சியில் கொரோனா தொடர்பான பணிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மேலும் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்தல், சேகரிக்கப்பட்ட திடக்கழிவுகளை தரம்பிரித்தல், மக்கும் மற்றும் மக்காத திடக்கழிவுகளை பாதுகாப்பாக கொண்டு சேர்த்தல் போன்ற காரணங்களுக்காகவும், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தினந்தோறும் பொது மக்களிடமிருந்து வருகின்ற குறைகளை களையவும் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவை எதிர்நோக்கி மூன்று மாத காலத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.61, நாள்.30.06.2020–இன்படி ஜீலை முதல் செப்டம்பர் 2020 வரை ந.க.எண்.0576/2015/எச்1, நாள்.30.06.2020–இன் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி பணிபுரியும் நிறுவனத்தின் பணியாளர்கள் மூலம் தூய்மை பணி செய்ய நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் 30.09.2020 உடன் ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு முடிவடைவதாலும், இந்நகராட்சி பகுதியில் கொரோனா (Covid-19) தொற்று பரவல் தாக்கம் அதிகமாக இருப்பதாலும், அண்டை மாவட்டமான இம்மாவட்டத்தில் கொரோனா தொற்று அபாயம் இருப்பதாலும், மாநில அரசு முழு ஊரடங்கு அமுல்படுத்தியுள்ளதால் பொது மக்கள் நலன் கருதியும், தொற்று பரவும் அபாயத்தை தடுக்கும் பொருட்டும், மேற்கண்ட திடக்கழிவு பணியினை செயல்படுத்த வேண்டிய சூழல் உள்ளதால் அவசர அவசியம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியில் ஈடுபடவேண்டிய அவசர சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவு எதிர்நோக்கியும் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று (01.10.2020 முதல் 31.12.2020 வரை) உள்ள மாத காலத்திற்கு அதே விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **பொது சுகாதாரம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணி உத்திரவு வழங்கிய திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய மன்றம். அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று வேலை**

உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0576/2020/எச்1)

**தீர்மான எண், நாள்** **121, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.6

சின்னமனூர் நகராட்சியில் உதவியாளராகப் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.04.2018–ஆம் நாளன்று பணி ஒய்வு பெற்ற திரு.வ.போஸ் த/பெ.வனத்தாண்டி என்பவரால், அன்னாரின் பிறந்த தேதியினை மாற்றியமைக்கும் பொருட்டு இழப்பீடு தொகை ரூ.12,00,000/– (ரூபாய் பன்னிரெண்டு இலட்சம் மட்டும்) வழங்கக்கோரி நகராட்சிக்கு எதிராக அசல் வழக்கு O.S.எண்.124/2020–இல் 1.நகராட்சி ஆணையாளர், சின்னமனூர், 2.நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை 3. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 4. சார்பதிவாளர், சின்னமனூர் 5.வட்டாட்சியர், உத்தமபாளையம் மற்றும் 6.மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி ஆகியோரை பிரதிவாதிகளாக சேர்த்து தேனி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளார்.

மேற்படி வழக்கில், இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.V.T.சிங்காரவேலன், பி.ஏ., பி.எல்., அவர்களை ஆஜராகி வழக்கினை நடத்திடவும், வழக்கறிஞர் கட்டண செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2868/2020/சி1)**

**தீர்மான எண், நாள்** **122, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.7

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN60S2751க்கு சில மராமத்துப் பணிகள் நகர்மன்ற தீர்மான எண்.111, நாள்.14.09.2020 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை செய்வதற்கு 22.09.2020–ஆம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | சாய் மல்டிபிராண்ட் கார் கேர், சின்னமனூர் | ரூ.20450/– |
| 2. | AMN மோட்டார்ஸ், கம்பம் | ரூ.22650/– |

அலுவலகக் குறிப்பு:–

**1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் சாய் மல்டிபிராண்ட் கார் கேர், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மேலும் நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு மற்றும் தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6260/2014/இ2)**

**தீர்மான எண், நாள்** **123, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.8**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN60S3761க்கு சில மராமத்து பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.113, நாள்.14.09.2020 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை செய்வதற்கு 23.09.2020–ஆம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | பெருமாள் டிராக்டர் ஒர்க்ஸ், சின்னமனூர் | ரூ.42000/– |
| 2. | D.K.லேத் வெல்டிங் & கேஸ் கட்டிங், சின்னமனூர் | ரூ.47520/– |

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் பெருமாள் டிராக்டர் ஒர்க்ஸ், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மேலும் நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0324/2014/இ2)**

**தீர்மான எண், நாள்** **124, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பாதாள சாக்கடைத் திட்ட சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள Grit Classifier Gear Wheel உடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி புதிய Grit Classifier Gear Wheel வாங்கி பொருத்த ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.30000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3261/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **125, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற வளர்ச்சி திட்டப் பணிகளை மாலை தமிழகம் தினசரி நாளிதழில் 30.09.2020–ஆம் அன்று பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.14700/– மாலை தமிழகம், சென்னை, அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
**1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1226/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **126, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் காவல் ஆய்வாளர் அவர்களின் 28.09.2020–ஆம் நாளிட்ட ந.க.27/H3–CO/2020 எண் கடிதத்தில் நகராட்சி எல்கைக்குட்பட்ட கீழ்க்கண்ட இடங்களில் அதிகமான வாகன விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்படுவதாகவும், சுமார் 20–க்கும் மேற்பட்ட வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக தெரிவித்து, மேற்படி விபத்துக்களை தவிர்க்கும் பொருட்டு, வேகத்தடை அமைத்துக் கொடுக்க வேண்டப்படுகிறது.

1. சீப்பாலக்கோட்டை ரோடு பிரிவு ராமவிலாஸ் பாத்திரக்கடை முன்பு
2. முத்தாலம்மன் கோவில் கட்சன் பால்கடை முன்பு
3. செக்காமுக்கு அரசு மருத்துவமனை செல்லும் வசதி (வடக்கு)
4. மார்க்கையன்கோட்டை சந்திப்பு மார்க்கையன்கோட்டை ரோடு அல்லி ஹோட்டல் முன்பு
5. தேரடி வீதி கிராம நிர்வாக அலுவலகம் முன்பு
6. காந்தி சிலை அருகில் பெருமாள் கோவில் ரோடு முருகன் டீ கடை முன்பு

மேற்கண்ட ஆறு இடங்களில் வரிசை எண்.1 மற்றும் 4–இல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடங்களாகும். அவைகள் தவிர்த்து எஞ்சிய நான்கு இடங்களில் வேகத் தடை அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள ரூ.50000/– மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.விபத்துக்கள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு அனுமதிக்கலாம்.**<br>**2. செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **127, நாள்.29.10.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் 2018–2019–ஆம் ஆண்டு முதல் 2019–2020–ஆம் ஆண்டு வரை நடைபெற்ற திட்டப் பணிகளை தமிழ்சுடர் தினசரி நாளிதழில் 22.08.2020–ஆம் அன்று பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.23100/– M/s.ESS ESS Publications, அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1226/2020/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **128, நாள்.29.10.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.13**

இந்நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் தொட்டி, குடிநீர் பகிர்மான குழாய் ஆகியவற்றில் உள்ள சூலிஸ் வால்வுகள் தேய்மானம் ஏற்பட்டு உள்ளதால், நகரில் குடிநீர் விநியோகம் சீரான முறையில் வழங்க தேவையான உதிரி பாகங்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.6.50/– இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் அனுமதிக்கலாம்.** |
| | **2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3278/2020/இ2)** |
| **தீர்மான எண், நாள்** | **129, நாள்.29.10.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.14**

கொரோனா நோய் தொற்று தடுப்புப் பணி காரணமாக பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு அமலில் இருந்ததால், உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள குத்தகை உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு 01.04.2020 முதல் 31.05.2020 வரையிலான காலக்கட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகள் / வரியில்லாத இனங்களுக்கு உரிய கேட்புத் தொகையினை (வாடகை மற்றும் குத்தகை) செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து வரப்பெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.எ.IV) அரசாணை (டி) எண்.278, நாள்.02.09.2020 மற்றும் அரசாணையின்படி செயல்பட அறிவுறுத்தப்பட்டு வரப்பெற்ற சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.8763/2020/ஆர்1, நாள்.29.09.2020 ஆகியவை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **130, நாள்.29.10.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.15**

சின்னமனூர் பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு தடுக்கும் பணி மேற்கொள்ள 37 தற்காலிக களப்பணியாளர்களை (DBC Worker) கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள 15.10.2020ம் அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் விலை மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளிகள் 21.10.2020ம் தேதியன்று திறக்கப்பட்டது. அதில் கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | HI Version, 30, G.R.Rest House, 48, Kopalakothan Street, Madurai. | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு | ரூ.269/– |
| 2. | Sun (Tamilnadu) Security Management Services (P) Ltd., Miky Home, Plot NO.10130, Ashok Nagar, Kochadai, Madurai. | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு | ரூ.298/– |
| 3. | Shankar Engineer, Chennai-40 | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு | ரூ.266/– |

| | | | |
|---|---|---|---|
| 4. | R.Paramananathan, Paramathevanpatti, Theni Dist | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு | ரூ.257/– |
| 5. | Relyon FAcilitty Services (P) Ltd., Okkian Thurai Pakkam, Chennai. | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு | ரூ.298/– |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ரூ.257/– என்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1468/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **131, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.16

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணி புரியும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், பொறியியல் பிரிவில் பணிபுரியும் பணியாளர்கள், RCH துப்புரவு பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் இரவு காவலர் ஆகியோர் 2020–2021ம் ஆண்டிற்கான இரண்டு ஜோடி சீருடைகள் மற்றும் அதற்கான தையல் கூலி வழங்கிடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.5514/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **132, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.17

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN60T4228 என்ற டம்பர் பிளேசருக்கு 2020–21ம் ஆண்டிற்கான காப்பீட்டு பிரிமியம் தொகை ரூ.42241/–ஐ தேனி யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த பட்டியல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி (ம) ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியுள்ளதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0308/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **133, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.18**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் 2018–2019 முதல் 2019–2020–ஆம் ஆண்டு வரை நடைபெற்ற வளர்ச்சி திட்டப் பணிகளை தினத்தந்தி தினசரி நாளிதழில் 23.10.2020–ஆம் அன்று பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.26460/– தினத்தந்தி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1226/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **134, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.19**

சின்னமனூர் நகர்வாழ் பொது மக்களுக்கு தேவையான குடிநீர் நகரிலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேம்படிகளம் அருகில் பெரியாற்றிலிருந்து, நீர் உறிஞ்சு கிணறுகளிலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீர் சேகரம் செய்யும் கிணற்றுக்கு குடிநீர் பம்ப் செய்யப்பட்டு, நீர் சேகரம் செய்யும் கிணற்றிலிருந்து, குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு குடிநீர் பம்ப் செய்யப்பட்டு, அங்கு குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு, அங்கிருந்து சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் தரைமட்ட தொட்டிகளுக்கு பம்ப் செய்யப்பட்டு, நகர்வாழ் மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகர்ப் பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் நபர் ஒன்றுக்கு 125 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகரில் உள்ள மொத்த குடிநீர் குழாய் இணைப்புகளின் மூலம் ஆண்டு வருவாயாக ரூ.65.72 இலட்சம் வருமானம் கிடைக்கிறது. குடிநீர் விநியோகம் பணி, தெருவிளக்குகள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிக்கு ஆண்டு மின் கட்டணமாக ரூ.1.75 கோடி செலுத்த வேண்டியுள்ளது. பொதுப் பிரிவு, குடிநீர்ப் பிரிவு மற்றும் பாதாள சாக்கடைப் பிரிவுகளுக்கான செலவு, வரவினைக் காட்டிலும் கூடுதலாக ஆண்டு தோறும் ஏற்படுகிறது. குடிநீர்ப் பிரிவு வரவு மின் கட்டணம் செலுத்தவே போதுமானதாக இல்லை. இவை தவிர குடிநீர் பராமரிப்பு செலவு, பணியாளர்கள் ஊதியம், குடிநீர் விநியோகம் பணிக்கு பெறப்பட்ட கடன் தவணைகள் செலுத்த இயலாத நிலை தொடர்ந்து ஏற்படுவதால், நகராட்சி நிர்வாகம் அதன் பராமரிப்புப் பணி மற்றும் மின் கட்டணம் செலுத்த இயலாத நிலை தொடர்ந்து நீடிப்பதால் 31.10.2020–ஆம் தேதிய நிலவரப்படி மின்சார வாரியத்திற்கு ரூ.119.00 இலட்சம் நிலுவை செலுத்த வேண்டியுள்ளது. சின்னமனூர் நகராட்சியின் மின் கட்டண நிலுவைத் தொகை ரூ.119.00 இலட்சத்தினை மானியமாக வழங்கக் கோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களைக் கேட்டுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் நிதியின் கணக்கு பற்றாக்குறையில் தொடங்கி, பற்றாக்குறையில் முடிவடைவதால், நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு, சின்னமனூர் நகராட்சிக்கு மின் கட்டண நிலுவைத் தொகை ரூ.119.00 இலட்சத்தினை மானியமாக வழங்க சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **135, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.20

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி1) துறை, அரசு கூடுதல் செயலாளர் அவர்களின் 26.06.2020 ஆம் தேதிய கடித எண்.9928/நநி5/2020–1–இன்படி, சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள தொகை ரூ.313.50 இலட்சத்திற்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் திட்டம் 2020-2021-இன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளுவதற்கு உரிய நிர்வாக அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| S.No | Description of work | Length in Km | Type of work | Estimate cost of Rs.in.Lakh |
|---|---|---|---|---|
| **I. Proposal for Water Supply** | | | | |
| 1 | Construction of 4.00 LL Capacity OHT at Sivasakthi Nagar, Construction of 3.00 LL Capacity OHT at Min Nagar, Construction of 2.00 LL Capacity OHT at Annamalai Nagar and Providing Distribution pipe line work at Extension area in municipal limit | - | Over Head Tank / Water Supply | 200.00 |
| **II. Proposal for Strom Water Drain and Culverts** | | | | |
| 2 | Construction of Culvert and Storm Water Drain at Various places in municipal limit | 2.000 | SWD and Culvert | 50.00 |
| **III. Proposal for Street Light** | | | | |
| 3 | Providing Street Light (LED) arrangement at Extension area in municipal limit | - | Street Light | 60.00 |
| **IV. Others** | | | | |
| 4 | Supply and Delivery of 10 KVA Genset at Gasifier Crematorium | 1 No | Generator | 3.50 |
| | **Total** | | | **313.50** |

**அலுவலகக் குறிப்பு:–** அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் பராமரிக்கப்படும் அடிப்படை வசதிகள் இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் 2020–2021–ஆம் நிதியாண்டிற்கு முழுமான்யமாக ரூ.313.50 இலட்சம் வழங்க வேண்டி கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.2380/2018/இ1)

**தீர்மான எண், நாள்** 136, நாள்.29.10.2020

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.21

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN60Z5198க்கு (மார்ஷல்) 2019–2020ம் ஆண்டுக்கான தகுதிச் சான்று (FC) முடிவடைவதால், 2020–21ம் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.125000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண், நாள்** 137, நாள்.29.10.2020

**தீர்மானம்**

*******

பொருள் எண்.22

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2020—2021—ஆம் ஆண்டிற்கான திட்டப் பணிகளின் காரணமாக சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிக்கு ரூ.475.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி 3 சிப்பம் பணிகளுக்கு 08.10.2020—ஆம் அன்று வரப்பெற்ற தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் சரிபார்க்கப்பட்டு விலை மதிப்பிலான ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>1. சிப்பம் எண்.1</u>

1. திரு.D.தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி — 4.98 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்
2. திரு.R.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி — 5.91 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

<u>2. சிப்பம் எண்.2</u>

1. திரு.D.தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி — 4.98 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்
2. திரு.R.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி — 5.87 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

<u>3. சிப்பம் எண்.3</u>

1. திரு.D.தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி — 4.98 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்
2. திரு.R.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி — 6.00 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:— | ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2020—21ன் கீழ் மேற்கண்ட விவரப்படி 3 சிப்ப பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன்படி வரிசை எண்.1, 2, 3 முறையே 4.98% சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ளதால், மேற்படி ஒப்பந்ததாரரிடம் பேரப் பேச்சு கடிதம் (Negotiation Letter) வழங்கக்கோரி 14.10.2020—இல் கடிதம் அனுப்பியமைக்கு, சாலைப் பணிகளுக்கான மூலதனப் பொருட்கள் விலையுயர்வு மற்றும் தொழிலாளர் கூலி உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலையினை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். மேலும் 2000—ஆம் வருடத்திய உள்ளாட்சி அமைப்பிற்கான பொறியியல் நடைமுறை நூல் இயல்—**II (Chapter-II) விதி எண்**.2.7.2—இன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். (ந.க.எண்.1654/2020/இ1). |
| தீர்மான எண், நாள் | 138, நாள்.29.10.2020 |
| தீர்மானம் | **திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பணியினை முடிக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு முதல் அழைப்பிலேயே** (1st Call) **ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 3 சிப்ப பணிகளுக்கும் முறையே 1. 4.98%, 2. 4.98%, 3. 4.98%, மதிப்பீட்டுத் தொகைக்கு கூடுதலாக கொடுத்துள்ள திரு.த.தமிழ்ராஜன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலித்து ஏற்கப்பட்டது.** |

*******

## பொருள் எண்.23

சின்னமனூர் நகராட்சிக்கு அரசாணை எண்.19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.12.2008–இன்படி ரூ.14.52 கோடி மதிப்பீட்டில் (திருத்திய) பாதாள சாக்கடைத் திட்டப் பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குழாய்கள் பதிக்கும் பணி மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணி இரண்டு கட்டங்களாக முடிக்கப்பட்டு, 5 ஆண்டுகள் சோதனை ஓட்டம் காலம் நிறைவு பெற்று 2018ல் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது. அதன் மூலம் மேற்படி பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் நாளது தேதி வரை 4832 வீட்டிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி வழங்கப்பட்ட வீட்டிணைப்புகள் விவரங்களுக்கான கேட்பினை கணினியில் பதிவு செய்யப்பட்டதில், கீழ்க்கண்ட விவரப்படி பழைய வரி விதிப்பு எண்ணுக்கு தனியாக கேட்பும், புதிய வரி விதிப்பு எண்ணுக்கு தனியாக கேட்பும் கணினியில் பதிவான விவரம் தெரிய வருகிறது. அதாவது ஒரு இணைப்பு இரண்டு முறை கேட்பு பதிவானதால் வசூல் பணியில் தொய்வு ஏற்படுகிறது. எனவே கீழ்க்கண்ட விவரப்படியான கேட்புக்கள் கணினியில் தவறாக பதிவானதை (Erroneous Demand) நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பாதாள சாக்கடை இணைப்பு – இரட்டை வரிவிதிப்பு எண்கள் விவரம்**

| வரிசை எண். | பாதாள சாக்கடை வரி விதிப்பு எண். | பாதாள சாக்கடை பழைய வரி விதிப்பு எண். | பாதாள சாக்கடை வரிவிதிப்புதாரர் பெயர் | கணினியில் நீக்கம் செய்யப்பட வேண்டி வரி விதிப்பு எண். | பாதாள சாக்கடை காலம் | 31.03.2021 வரை கணினியில் நீக்கம் செய்யப்பட வேண்டி கேட்பு ரூ.(2020–21) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 121/002/00315 | 121/19757 | குணசுந்தரராஜன் | 121/002/00315 | 2016–2017–1 | 3480 |
| 2 | 121/002/00222 | 121/367 | கனிதா சுரேந்திரன் சுபால் | 121/367 | 2013–2014–3 | 5400 |
| 3 | 121/002/00314 | 121/19742 | பிரேமா | 121/002/00314 | 2016–2017–4 | 3060 |
| 4 | 121/002/00313 | 121/19741 | எஸ்.வைரமுத்து | 121/19741 | 2017–2018–1 | 2880 |
| 5 | 121/004/00712 | 121/1475 | ராமசாமி | 121/1475 | 2014–2015–1 | 5040 |
| 6 | 121/004/01079 | 121/1768 | பன்னீர் செல்வம் | 121/1768 | 2016–2017–3 | 3240 |
| 7 | 121/004/01169 | 121/14200 | எம்.ஜீவா | 121/004/01169 | 2018–2019–3 | 1720 |
| 8 | 121/004/01682 | 121/14734 | ஜீ.திருப்பதி ராஜ் | 121/004/01682 | 2016–2017–2 | 3300 |
| 9 | 121/004/01260 | 121/14513 | எம்.முருகன் | 121/14513 | 2013–2014–1 | 5760 |
| 10 | 121/004/00444 | 121/14723 | அய்யம்மாள் | 121/14723 | 2013–2014–3 | 5400 |
| 11 | 121/004/01683 | 121/14735 | ஜீ.திருப்பதி ராஜ் | 121/004/01683 | 2016–2017–2 | 3300 |
| 12 | 121/004/01692 | 121/14761 | மாரிமுத்து | 121/14761 | 2014–2015–1 | 5040 |
| 13 | 121/004/02073 | 121/14556 | சிவசிதம்பரம் | 121/004/02073 | 2019–2020–1 | 1540 |
| 14 | 121/004/00886 | 121/1704 | வி.முருகன் | 121/1704 | 2015–2016–4 | 3780 |
| 15 | 121/004/00020 | 121/1372 | டி.பாண்டியன் | 121/1372 | 2018–2019–1 | 2160 |
| 16 | 121/005/00082 | 121/2463 | செந்தில்குமார் | 121/2463 | 2013–2014–2 | 5400 |
| 17 | 121/005/00072 | 121/2222 | தங்கேஸ்வரி, விக்னேஷ்குமார் | 121/2222 | 2012–2013–4 | 5940 |
| 18 | 121/006/00247 | 121/17066 | ஏ.விஜயகுமார் | 121/17066 | 2015–2016–4 | 3780 |
| 19 | 121/006/00237 | 121/17045 | குமார் | 121/17045 | 2015–2016–4 | 3780 |
| 20 | 121/006/00344 | 121/2780 | அழகர்சாமி | 121/2780 | 2013–2014–1 | 5760 |
| 21 | 121/006/00296 | 121/2675 | சுப்பம்மாள் | 121/2675 | 2012–2013–2 | 6300 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22 | 121/006/00237 | 121/17045 | டி.குமார் | 121/17045 | 2016–2017–4 | 3780 |
| 23 | 121/007/00011 | 121/2802 | பெருமாள் | 121/2802 | 2012–2013–4 | 5940 |
| 24 | 121/007/00070 | 121/2958 | மாரியம்மாள் | 121/2958 | 2012–2013–4 | 5940 |
| 25 | 121/007/00042 | 121/2834 | பி.முருகேஸ்வரி | 121/2834 | 2014–2015–1 | 5040 |
| 26 | 121/007/00052 | 121/2844 | பழனிசுந்தரி | 121/2844 | 2013–2014–1 | 5760 |
| 27 | 121/007/00065 | 121/2953 | முருகேஸ்வரி | 121/2953 | 2013–2014–2 | 5580 |
| 28 | 121/007/00169 | 121/13021 | மோகன்தாஸ் ரோகினி மைனர் | 121/007/00169 | 2017–2018–3 | 2460 |
| 29 | 121/007/00344 | 121/13125 | அழகுராணி | 121/13125 | 2014–2015–1 | 5040 |
| 30 | 121/007/00345 | 121/13126 | ரத்தினம் | 121/13126 | 2013–2014–1 | 5760 |
| 31 | 121/007/00308 | 121/2930 | காமாட்சி என்ற ராஜேந்திரன் | 121/2930 | 2013–2014–3 | 5400 |
| 32 | 121/008/00099 | 121/12001 | சதக்தக்குலா | 121/12001 | 2013–2014–1 | 5760 |
| 33 | 121/008/00103 | 121/3083 | பகவதி | 121/008/00103 | 2016–2017–3 | 3180 |
| 34 | 121/009/00400 | 121/3684 | அன்புகுமார் | 121/009/00400 | 2017–2018–3 | 2520 |
| 35 | 121/009/00449 | 121/3726 | நாகராஜன் | 121/009/00449 | 2016–2017–4 | 3060 |
| 36 | 121/010/00458 | 121/4215 | காளியப்பன் | 121/4215 | 2013–2014–1 | 5760 |
| 37 | 121/011/00042 | 121/4360 | சித்ரா ராமசுப்பிரமணி | 121/011/00042 | 2016–2017–4 | 3060 |
| 38 | 121/011/00046 | 121/4364 | மணிகண்டன் | 121/011/00046 | 2016–2017–1 | 3480 |
| 39 | 121/011/00072 | 121/4392 | இந்திரா ராணி | 121/4392 | 2012–2013–4 | 5940 |
| 40 | 121/011/00271 | 121/4521 | மோகன் | 121/011/00271 | 2016–2017–3 | 3180 |
| 41 | 121/011/00352 | 121/4569 | அமுதா | 121/4569 | 2014–2015–4 | 4420 |
| 42 | 121/011/00424 | 121/4622 | செந்தில்குமார் | 121/011/00424 | 2016–2017–3 | 3180 |
| 43 | 121/011/00630 | 121/4799 | விஜயலெட்சுமி | 121/011/00630 | 2020–2021–1 | 720 |
| 44 | 121/012/00178 | 121/5257 | ரவிச்சந்திரன் | 121/012/00178 | 2016–2017–4 | 3060 |
| 45 | 121/012/00081 | 121/4978 | லோகமணி அம்மாள் | 121/012/00081 | 2016–2017–3 | 3120 |
| 46 | 121/012/00154 | 121/5054 | பாஸ்கரன் | 121/5054 | 2013–2014–3 | 5400 |
| 47 | 121/012/00011 | 121/4905 | ஜெயலெட்சுமி | 121/012/00011 | 2016–2017–3 | 6360 |
| 48 | 121/012/00304 | 121/5154 | முத்துலெட்சுமி பாக்கியலெட்சுமி | 121/5154 | 2012–2013–3 | 6120 |
| 49 | 121/012/00344 | 121/5294 | சரோஜா | 121/012/00344 | 2016–2017–4 | 3060 |
| 50 | 121/013/00046 | 121/10140 | கே.எஸ்.குமார் | 121/013/00046 | 2016–2017–3 | 3180 |
| 51 | 121/013/00269 | 121/9888 | நல்லம்மாள் | 121/9888 | 2012–2013–2 | 6300 |
| 52 | 121/013/00305 | 121/10157 | பாண்டியராஜ் | 121/013/00305 | 2019–2020–1 | 1380 |
| 53 | 121/013/00282 | 121/9902 | ராமச்சந்திர பிரபா | 121/9902 | 2012–2013–3 | 6120 |
| 54 | 121/013/00283 | 121/9903 | துரைச்சாமி | 121/9903 | 2013–2014–4 | 5220 |
| 55 | 121/013/00267 | 121/9886 | பாலுச்சாமி | 121/9886 | 2012–2013–2 | 6300 |
| 56 | 121/014/00035 | 121/10232 | சின்னராஜ் | 121/014/00035 | 2020–2021–1 | 720 |
| 57 | 121/014/00075 | 121/10273 | அய்யப்பன் | 121/014/00075 | 2016–2017–1 | 3480 |
| 58 | 121/014/00330 | 121/10446 | ரவிச்சந்திரன் | 121/10446 | 2013–2014–2 | 5580 |
| 59 | 121/014/00369 | 121/10479 | ரெங்கநாதன் | 121/10479 | 2013–2014–3 | 5400 |
| 60 | 121/015/00397 | 121/10987 | திருமுருகன் | 121/015/00397 | 2013–2014–2 | 5580 |
| 61 | 121/016/00202 | 121/5575 | வீரபத்திர பிள்ளை | 121/016/00202 | 2017–2018–3 | 2460 |
| 62 | 121/016/00257 | 121/5632 | மாரியப்பன் | 121/5632 | 2013–2014–1 | 5760 |
| 63 | 121/017/00120 | 121/5879 | ராஜ்குமார் | 121/017/00120 | 2016–2017–1 | 3480 |
| 64 | 121/017/00306 | 121/11346 | வனசுந்தரி | 121/11346 | 2015–2016–3 | 3960 |
| 65 | 121/017/00613 | 121/11426 | தர்மராஜா | 121/017/00613 | 2016–2017–4 | 3060 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 66 | 121/017/00704 | 121/6229 | ஜெயந்திமதி | 121/017/00704 | 2016–2017–4 | 3060 |
| 67 | 121/017/00770 | 121/6090 | ஜெயராஜ் | 121/017/00770 | 2016–2017–4 | 3060 |
| 68 | 121/018/00031 | 121/6273 | மஞ்சுளா | 121/6273 | 2012–2013–3 | 6120 |
| 69 | 121/018/00041 | 121/6283 | முனியப்பன் | 121/018/00041 | 2016–2017–3 | 3180 |
| 70 | 121/019/00137 | 121/6878 | ஜான் முத்துச்சாமி | 121/6878 | 2013–2014–2 | 5580 |
| 71 | 121/021/00121 | 121/7477 | பழனிவேல் தெய்வேந்திரன் | 121/021/00121 | 2016–2017–3 | 3180 |
| 72 | 121/023/00045 | 121/8294 | எஸ்.லதா | 121/8294 | 2013–2014–3 | 5400 |
| 73 | 121/024/00658 | 121/8682 | ராமையா தேவர் | 121/024/00658 | 2020–2021–1 | 720 |
| 74 | 121/025/00071 | 121/9057 | விலஙகையா | 121/025/00071 | 2016–2017–3 | 3180 |
| 75 | 121/025/00265 | 121/9063 | சத்யா | 121/025/00265 | 2016–2017–4 | 3060 |
| 76 | 121/025/00214 | 121/8954 | சுசிலா | 121/8954 | 2015–2016–4 | 3780 |
| மொத்தம் | | | | | | **316440** |

அலுவலகக் குறிப்பு:– **கணினியில் ஒரு பாதாள சாக்கடை இணைப்பிற்கு இரண்டு முறை கேட்பு பதிவாகியுள்ளதால் தவறாக பதிவாகியுள்ள கேட்பினை கணினியில் நீக்கம் செய்ய அனுமதிக்கலாம். (ந.க.எண்.4229/2002/இ1)**

**தீர்மான எண், நாள்** **139, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.24

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அலுவலக ந.க.எண்.2751/2017/ஜே1, நாள்.23.04.2018–ஆம் தேதிய கடிதத்தில் 50 வீட்டிற்கு ஒரு டெங்கு தடுப்பு பணியாளர்கள் (DBC) நியமித்து கொள்ள உத்திரவிட்டதை தொடர்ந்து உரிய விதிமுறைபடி மன்ற அனுமதி பெற்று டெங்கு தடுப்புப் பணிகள் பார்த்து வரப்பட்டது. தற்போது கொரோனா தொற்று பரவி வரும் சூழ்நிலையில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் காணொலி காட்சி நாள்.25.06.2020 கூட்டத்தில் அறிவுறுத்தியதை தொடர்ந்தும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் அலுவலக ந.க.எண்.1084/2020/அ3, நாள்.25.06.2020 தேதிய கடிதத்தில் டெங்கு தடுப்பு பணி மேற்கொண்டது போல கொரோனா தடுப்பு பணிக்கு மேற்படி களப்பணியாளர்களை (DBC) பயன்படுத்திக் கொள்ள அறிவுறுத்தியதை தொடர்ந்து நாளது தேதி வரை களப்பணியாளர்களை (DBC) பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தக்காலம் 16.10.2020–ஆம் தேதியுடன் முடிவடைவதால் கொரோனா மற்றும் டெங்கு தடுப்பு பணிகள் செய்ய அவசர அவசியம் கருதி மேற்படி ஒப்பந்த பணியினை தற்போது மேற்கொண்டு வரும் திரு.ஆர்.பரமானந்தன் ஒப்பந்ததாரர் மூலமாக ஏற்கனவே உத்தரவு வழங்கப்பட்ட விலை விகிதத்திலும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு மேற்கண்ட ஒப்பந்த பணியாளர்களை 17.10.2020 முதல் 31.12.2020 வரை நீட்டிப்பு செய்யவும். மேலும் அதற்கான செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– **1.பொது சுகாதாரம் மற்றும் டெங்கு, கொரோனா தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி 17.10.2020 முதல் 31.12.2020 வரை நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம்**

ஏற்கலாம்.

**தீர்மான எண், நாள்** **140, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.25**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2020–21–இன் கீழ் தொகை ரூ.475.00 இலட்சத்திற்கு மூன்று சிப்பங்களாக சாலைப்பணிகள் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரி மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கிலம் தினசரி நாளிதழில் 22.09.2020–ஆம் அன்று பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.139598/– M/s Accord Advertising Agencies, Chennai அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1654/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **141, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.26**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பழைய அலுவலகத் தெருவில் அமைந்துள்ள வணிக வளாகத்தில் மூன்றாம் தளத்தில் உள்ள தண்ணீர் தொட்டி சிதலமடைந்து பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளதால் பாதுகாப்பு நலன் கருதி அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.76000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.**

**தீர்மான எண், நாள்** **142, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.27**

சின்னமனூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, மேற்படி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் வார்டு எண்.2, இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெரு இடுகாட்டில் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. மேற்படி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவு நீர் வாய்க்காலில் அடைப்பு ஏற்பட்டு அருகில் உள்ள சாலையின் வழியாக செல்கிறது. மேலும் கால்வாய் புதர்மண்டியுள்ளது. மேற்படி கால்வாயில் ஏற்பட்டுள்ள புதர்கள் மற்றும் கழிவுகளை ஜே.சி.பி இயந்திரம் மூலம் அகற்றிவிட்டு, கழிவு நீர் வாய்க்காலில் தடையின்றி செல்வதற்கும் மேலும் நகராட்சிப் பகுதியில் பிரதான குழாய் உடைப்பினை தோண்டி சரி செய்யும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்டுள்ள ரூ.1.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்படி பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.3430/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **143, நாள்.29.10.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.28**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான நேருஜி பேருந்து நிலையத்தின் முன்புறம் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் சமையலுக்கு பயன்படும் அடுப்பு, பர்னர், கேஸ் லைன் மற்றும் பாய்லரில் சில மராமத்துப் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினம் ரூ.19000/–க்கு இந்நகர்மன்றத்தின் 04.02.2020ம் நாளிட்ட 802–ஆம் எண் தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. மராமத்துப் பணி நடைபெற்று வரும் பொழுது 2 அரிசி குக்கரிலும் மற்றும் எஸ்.எஸ்.பைப் லைனில் பழுது ஏற்பட்டதால், புதிதாக மாற்றியமைத்த வகையிலும் சரக்கு மற்றும் சேவை வரி சேர்த்து கூடுதலான ஆன செலவு ரூ.12360/– சேர்த்து மொத்தம் ரூ.31360/– செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **அம்மா உணவகப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி கூடுதல் செலவினத்தை அனுமதிக்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **144, நாள்.29.10.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.29**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு புதிய மைக்செட், ஸ்பீக்கர் மற்றும் மின் உபகரண சாதனங்கள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ம் வருடத்திய பிரிவு 15–இன் கீழ் திரு.கே.வனராஜ் விலைப்புள்ளிதாரர் மூலம் நடவடிக்கை மேற்கொண்டதையும் தொகை ரூ.16800/– வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் பதிவு செய்யலாம்.**<br>**2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ம் வருடத்திய பிரிவு 15–இன் கீழ் பணி நடவடிக்கை மேற்கொண்டதையும், பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2339/2020/இ2).** |
| **தீர்மான எண், நாள்** | **145, நாள்.29.10.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.30**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் (வார்டு எண்.1 மற்றும் 27 தவிர) சிறப்பாக செயல்பட்டு வருகிறது. பாதாள சாக்கடைத் திட்ட பைப்லைன்களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்யும் பணி ஜெட்ராடிங் இயந்திரம் மூலம் அவ்வப்போது சரி செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் குறுகிய தெருக்களில் ஜெட்ராடிங் இயந்திரம் சென்று வர இயலவில்லை. எனவே குறுகிய தெருக்களில் பாதாள சாக்கடை திட்ட அடைப்புகளை சரி செய்யும் பணியினை பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மேற்கொள்ள புதியதாக சிறிய அளவிலான மொபைல் ஜெட் பெட்ரோல் இன்ஜின் டிரைவன் மெஷின் ஒரு எண்ணம் வாங்கவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1227/2020/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **146, நாள்.29.10.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.31**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட நகரளவு வார்டு –A, பிளாக்–4, நகரளவு எண்.4/7–இல் கட்டுப்பட்ட 144 ச.மீ பரப்பளவு உள்ள இடத்திற்கு மனை வரன்முறைப்படுத்த கோரி 03.09.2020–ஆம் தேதி திருமதி.ஆர்.தனலெட்சுமி என்பவர் விண்ணப்பித்துள்ளார். மேற்படி மனைக்கு வளர்ச்சிக் கட்டணமாக 1 ச.மீட்டருக்கு ரூ.150/– வீதம், 144 ச.மீட்டருக்கு ரூ.21600/– செலுத்தப்பட வேண்டும்.

ஆனால், மனுதாரரால் ரூ.55350/– செலுத்தப்பட்டுள்ளது. அத்தொகையில் ரூ.33750/– கூடுதல் ஆகும். எனவே மேற்காணும் தொகையினை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மனுதாரரால் வளர்ச்சிக் கட்டணத்தில் கூடுதலாக செலுத்திய தொகை ரூ.33750/–யை அன்னாருக்கு வழங்குவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2643/2020/எப்1)** |
| **தீர்மான எண், நாள்** | **147, நாள்.29.10.2020** |
| **தீர்மானம்** | |

*******